**20.08.2026**

**MCOP. No. 184/2022**

**ம.சா. 1 – திரு.ஷேக்தாவுத்**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டுள்ளார்.**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 11.29 மு.ப**

ம.சா.ஆ.10 மருத்துவ இரசீதுகள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டன என்றால் சரியல்ல, ஏற்கனவே இருந்தன தாக்கல் செய்யாமல் தவறிவிட்டது. பில்களின் உண்மை தன்மை நிரூபிக்க அதை பொறுத்து சாட்சியை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். விபத்து நடந்தது 2022 என்றால் சரிதான். ம.சா.ஆ.11 ஆவணம் 2019 வருடத்திற்குரியது என்றால் சரிதான். நான் எனது மனுவில் ம.சா.ஆ.11 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை 1991லிருந்து குத்தகைக்கு எடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, வேறு ஒருவர் வைத்திருந்தார். நான் அவரிடமிருந்து வாங்கினேன். ம.சா.ஆ.11 பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். அதில் ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேல் தொகை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவண சாட்சியம் பதிவு செய்யப்படாத காரணத்தினால் சாட்சியத்தில் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.11 வழக்கிற்காக பின்யோசித்து தயாரித்து தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.11 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை நான் ஒருபோதும் குத்தகைக்கு எடுத்து நடத்தவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.11 உண்மையாக இருந்திருந்தால் அதை முன்பே தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவ்வாறு தாக்கல் செய்யாதிலிருந்து அது பொய்யான ஆவணம் என்பது தெரிய வரும் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.12 ஆவணத்தில் 17.10.2024 தேதியிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டு 2 ஆண்டுகள் கழித்துள்ள ஆவணம் என்றால் சரிதான். ம.சா.ஆ.12 ஆவணத்திற்கும் வழக்கு விபத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.12 2024–2025க்கு நான் தொழில் வரி செலுத்திய ஆதாரம் என்றால் சரிதான். நான் பின்யோசித்து தலைக்கவசம் அணிந்துக்கொண்டு வாகனம் ஓட்டியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது கவனக்குறைவுதான் காரணம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.08.20 18:12:08 +0530

தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 11.38 மு.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.08.20 18:12:12 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 20.08.2026